

யாழ் புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும்
கனடாவில் வசித்து வந்தவருமாகிய

# அமரர். வேலுப்பிள்ளை செல்லத்துரை

அவர்களின்
சிவபதப்பேறு குறித்த

# நினைவுக் குறிப்பேடு

04/09/2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும். - வள்ளுவர் -



பூவுலக
ஜனனம்
27.09.1925

விண்ணுலக
பயணம்
25.07.2010

அமரர்.

# வேலுப்பிள்ளை செல்லத்துரை

திதி நிர்ணயம்

ஆண்டு விகிர்த்தி பூரணை உத்திரத்தில் துறம்
பூண்ட பட்டனத்தார் பூசையன்று - விண்ணாள
நல்தமிழாடி ஞாயிறு பத்தில் பந்து ஈசனடி
செல்வன் செல்வத்துரை சேர்ந்தன்னே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்பின், பண்பின்,
பாசத்தின், அறிவின்
உறைவிடமாகி,
கனிவான மொழி பேசி
ஓயாத நினைவுகளை
எமக்களித்து
அகலாத பாசம் இங்கிருக்க
எம்மை
விட்டுப் பிரிந்த எங்கள்
இதய தெய்வத்தின்
பொற்பாத மலர்களில்
இப் பொன் மலர்
சமர்ப்பணம்.

மனைவி, பிள்ளைகள்
சகோதரர்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிடியதனுருவுமை கொளமிகு கரியது
வடி கொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணுக்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு

## தேவாரம்

காதலாகிக் கசிந்து கண் ணீர்மல்கி
ஓதுவார் தம்மை நன்னெறிக் குய்ப்பதும்
வேத நான்கினும் மெய்ப்பொருளாவதும்
நாதன் நாம் நமச்சிவாயவே.

## திருத்தாண்டகம்

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங்காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

வேண்டத் தக்கதறிவோய் நீ வேண்ட
முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ வேண்டி
என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தாய் யானும் அதுவே
வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன்றுண் டென்னில் அதுவும்
உன்தன் விருப்பன்றோ.

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே! நின்ற
நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே! யோக
வெள்ளமே! மேருவில் வீரா!
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா!
அம்பொன் செய் அம்பலத்தரசே!
ஏறணி கொடியெம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமாறிசையே.

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சீற்றம் பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருமந்திரம்

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரு மாவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே.

## புராணம்

ஆலமே அமுதாக உண்டுவானவர் களித்துக்
காலனை மார்க்கண்டற்காகக் காய்ந்தனை அடியேற்கின்று
ஞாலநின் புகழேயாகவேண்டும் நான்மறைகள் ஏற்றும்
சீலமே ஆலவாயிற் சிவபெருமானே என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

## மங்களம்

சங்கராய சங்கராய சங்கராய மங்களம்
சங்கரீ மனோகராய சாஸ்வதாய மங்களம்
குருவராய மங்களம் தத்தாத்ரேய மங்களம்
கஜானனாய மங்களம் 'டானனாய மங்களம்
சாந்த சக்தி மங்களம் ஸர்வசக்தி மங்களம்
சீதாராம மங்களம் ராதாகிரு'ண மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் மங்களம்
மங்களம் மங்களம் மங்களம் ஜெயமங்களம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறப்பும் இறப்பும் அற்றுப் போகவும் (மோட்சமடைய) தமிழ்வேதம் முழுவதும் ஓதிய பலனும் நல்கும் ஒப்பற்ற பதிகம்

திருஞானசம்பந்தப் பெருமானுடைய தந்தையார் சிவபாத இருதயர் தமது பூசைக் காலத்துத் தினமும் பிள்ளையாரது திருப்பதிகங்களை ஓதும் முறைமை உடையவராய் இருந்தார். நாளும் பதிகங்கள் பெருகிக் கொண்டே வந்ததால் சிவபாத இருதயர் முற்றும் ஓத இயலாது வருத்தமடைந்தார். இதை அறிந்த திருஞானசம்பந்தப் பெருமான் இத் திருவெழுகூற்றிருக்கை எனும் பதிகத்தை தம் தந்தையாருக்கு அருளி, இதனை ஓதின் எல்லா பதிகங்களையும் ஓதிய பலன் கிடைக்கும் என்றும் கூறியருளினார்.

எனவே, இப்பதிகத்தை ஓதினால் தமிழ் வேதத்தையே ஒருமுறை ஓதிய பலன் (தேவாரம் முழுவதும் ஓதிய பயன்) நிச்சயம் கிடைக்கும். அளவிலாப் புண்ணியம் பெறலாம். இப்பதிகம் ஓதும் வீடும் தூய்மை அடையும்.

## திருஞானசம்பந்தர் அருளிய திருஎழுகூற்றிருக்கை முதலாம் திருமுறை

ஓர் உரு ஆயினை மானாங்காரத்து
ஈரியல் பாய் ஒரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத் தளித் தழிப்ப மும்மூர்த்திகள் ஆயினை
இருவரோடு ஒருவனாகி நின்றனை
ஓர் ஆல்நீழல் ஒண்கழல் இரண்டும்
முப்பொழுதேத்திய நால்வர்க்கும் ஒளிநெறி
காட்டினை நாட்டம் மூன்றாகக் கோட்டினை
இருநதி அரவமோடு ஒரு மதி சூடினை
ஒருநாள் ஈர்அயில் மூவிலைச் சூலம்
நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்து
இருகோட்டு ஒருகரி ஈடழித்து உரித்தனை
ஒருதனு இருகால் வளைய வாங்கி
முப்புரத்தோடு நானிலம் அஞ்சக்
கொன்று தலத்துற அவுணரை அறுத்தனை
ஐம்புலன் நாலாம் அந்தக்கரணம்
முக்குணம் இருவளி ஒருங்கிய வானோர்
ஏத்த நின்றனை ஒருங்கிய வானோர்
ஏத்த நின்றனை ஒருங்கிய மனத்தோடு
இருபிறப்பு ஓர்ந்து முப்பொழுது குறைமுடித்து
நான்மறை ஓதி ஐவகை வேள்வி
அமைத்து ஆறங்க முதலெழுத்தோதி
வரன்முறை பயின்றெழு வான்தனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபதமுரலும் வேணுபுரம் விரும்பினை
இகலியமைந்துணர் புகலி அமர்ந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கு நாற்கடல் சூழ் வெங்குரு விளங்கினை
பாணி மூவுலகும் புதைய மேல்மிதந்த
தோணி புறத்து உறைந்தனை தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தாராய் ஏய்ந்தனை
வரபுர மென்றுணர் சிரபுரத் துறைந்தனை
ஒருமலை எடுத்து இருதிறலரக்கன்
விறல் கெடுத்தருளினை புறவம்புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறிவாய்
பண்பொடு நின்றனை சண்பை அமர்ந்தனை
ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக காழி யமர்ந்தனை
எச்சன் ஏழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறுபதமும் ஐந்தமர் கல்வியும்
மறை முதல் நான்கும்
மூன்று காலமும் தோன்ற நின்றனை
இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்
அனைய தன்மையை யாதலின் நின்னை
நினைய வல்லவர் இல்லை நீள்நிலத்தே

(முற்றிற்று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

காரைக்கால் வேளாளர் சங்கர முதலிவாழிவந்த
புன்னாலைக்கட்டுவன் அமரர் வேலுப்பிள்ளை (பணக்காரன்)
ஐயாத்தைப்பிள்ளை மகன்

## செல்லத்துரை அவர்களின் நினைவு அஞ்சலி

வகுத்தான் வகுத்தவழிநின் மறைவை எண்ணி
வழியும் கண்ணீர் பெருகாத கண்கள் ஒளிஇல்லை

தமிழ் ஈழவள நாட்டின் வடபால் கடல் சூழ்ந்த யாழ்ப்பாண நகரின் ஓர் அங்கமான புன்னாலைக்கட்டுவன் (புன்னைநகர்) சீரும் சிறப்பும் பெற்ற அழகிய ஊர். அங்கு கற்பகதருவொடு (பனைமரம்) தெங்கு, கமுகு, கதலி, மா, பலா, மரம்பலவகை செடி கொடிகளுடன் மல்லிகை, முல்லை, வன்னி நறுமன பூச்செடிகொடிகளும் வான்பயிர்களும் நகருக்கு மெருகூட்டுகின்றன. வளங்களைப் பலகொண்ட நகரிலே சீர்காழி கோவிந்தராஜன் பாடிய சிறப்பு பெற்ற அருள்பாலிக்கும் தலமாக ஆயக்கடவை ஐங்கரன் கோயிலும் யாழ் நகரிலிருந்து பலாலி வான்ஊர்தி தலத்துக்கு செல்லும் பலாலிதெரு வீதியில் யாழ் நகரிலிருந்து பத்துக் கிலோ மீற்றரிலும் பலாலி வான்ஊர்தியிலிருந்து இரண்டு மையிலிலும் உள்ள ஐந்து மைல் சதுர விஸ்தாரனத்தைக் கொண்ட கவர்ச்சியுள்ள கிராமமாகும். மேலும் கடல் சூழ்ந்த தேசமானதால் இங்கு வீசும் வாடை சோழக மெல்லிய தென்றல் காற்று சுகமானது. இவ்விதம் கண்டவரை ஈர்க்கும் புன்னையம்பதியில் 27/09/1925இல் பிறந்து கல்வி பயின்று விவசாய தொழில் தொழிலாக இருக்குங்கால் நாட்டின் நிலைமை சீர்கெட்டதால் கனடிய தேசம் வந்து பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுடன் வாழ்ந்து கொண்டிருந்த காலம் சிவபதமடைந்த வேலுப்பிள்ளை செல்லத்துரை அவர்களான இவர் வேலுப்பிள்ளை ஐயாத்தைபிள்ளையின் மூன்றாறாவது மகனாகப் பிறந்தார். இவருக்கு மூத்தவர் தம்பு (தம்பநாதன்), அடுத்து பெண்மகள் இரத்தினதேவி (அன்னம்மா) பிறந்தார். இவருக்குப் பின்னே அமரர் செல்லத்துரை சகோதரனாக பிறந்தார். இங்கனே சிறுவயதில் கல்வியைத் தொடர்ந்து ஏருண்டு வாழ்வாரேவாழ்வார் மற்றோர் தொழுதுண்டு பின் செல்பவர் என்ற வள்ளுவர் குறளுக்கு உதாரணமாக விவசாயத்தில் ஈடுபட்டு பலபயிர்களைச் செய்து சீவியம் நடத்தி வருங்கால் இல்லற நிறைவுக்கு துணைவேண்டி புலோலியூர் கணபதிப்பிள்ளை மகள் தேவியை மணம் புரிந்து லதா, சுரேஸ், சந்திரா என மூன்று நன்மக்களைப் பெற்று மங்களவளத்துடன் வாழ்ந்துவருங்கால் தலைமகள் லதாவை கருகம்பானையூர் செல்வமகன் ராதாகிருஸ்ணனையும், சுரேசை புலோலியூர் செல்வி உமாநந்தினிக்கும், ஈற்றில் சந்திராவை மல்லாகம் சிவரூபனுக்கும் மணம்முடித்து அவர்களின் பிள்ளைகளைக் கண்டு தன் பேரர்களென குறிஞ்சி, நதி, சாம்பவியுடன் மகிழ்ந்து குலாவி அனுபவித்து வருங்கால் கனடாவில் நோய்வாய்ப்பட்டு 25/07/2010இல் சிவபதம் அடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஆக்கம் : வே. தம்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதி நீ பூரணமே

1. செல்வ மகனாக செல்வ நெறி நின்று
செல்வம்செறி சிறப்பான செல்வமே - செல்லத்துரையே
செந்திவேல் சரணார சேவடியே சரனென்று
அந்திவேளைசொல்லாம பேசாமல் சென்றனையே

2. செம்பவளச் சொல்லழகும் சிந்தைகவர் சீர்நோக்கும்
ஓங்குமுடலுள்ள யுயருண்மைபண்பு காப்பதர்க்கும்
பொறுமைபெரு பாசமனநேசம் எல்லாமும்
உறுதியுடனே அணைக்கும் நின்கைத்தலமே

3. இன்மொழியால் இத்தலத்தார் இதயம் வென்று நின்றாய்
நின் உயிரின் உணர் உணவை உணர் காலன் கருகிவந்து
முன்னாகக் கவர்ந்து மூவுலகுமேலாக சென்றனனோ
பொன்னான வாழ்வுதனை பொய்யாக்கி மறைந்தனையே

4. நல்லநெறி காட்டிவாழ்ந்திருந்த செல்வமகனே
செல்லத்துரையே பாச நிறையுடன் பிறப்பே
பல்லோரும் பரதவிக்க பரமபதம் சென்றனையே
நல்லண்ணன் தலைவன் நாம் தவிக்கின்றோம் தளர்ந்து

5. போற்றும் பெருமக்கள் பேரன்பெருந்துணைவியுற்றார்
உறவோர்யுறு சகோதர சகோரிகள் மற்றும்
கற்ற சுற்றம் சூழும் ஊராரும் வற்ராத
பற்ரான அன்புடனே என்றும் உனை வாழ்த்தி நிற்பர்.

6. இந்த நில்லாயுலகில் நின்பெருமை நிலைக்கும் நின்
பந்த பாசமனையாழும் மைந்தருமே நினைந்துரும்
காலமெல்லாம் நீ சோதியாய் காட்சி தர
சால நாமெல்லாரும் வாழ்ந்த வாழி நீ பூரணமே

ஓங்குமுடல் ஓங்குமுன்மை ஓங்குமுயிர்
ஓங்கும் ஓம்என்னும் உண்மை ஓங்காரத்தினால்
ஓங்கும் இன்பசுகம் ஓங்கி ஓங்குமே என்றும்
ஓங்காக பாங்கன பரமனடிக் கீழ் நீ இருக்க.

ஆக்கம் : வே. தம்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லத்துரை பொதுநிலை
# ஆத்மகாய அஞ்சலி

காலடி ஓசையில் கனிமொழி பிறக்கும்
வாய்மொழி பேச்சில் அமிர்தம் சிந்தும்
செவிகள் கேட்பது தேன் தமிழ் திருமுறை
கண்கள் காண்பது கதிரவன் காட்சியே
கைகள் தொழுவது ஆயாக்கடவை ஐங்கரனையே
கால்கள் வலம் செய்வது அனைமுகத்தனையே
உள்ளம் நினைப்பது ஓங்கார மொன்றே
ஆன்ம அறிவை அகம் காட்டும் சீலமே
துணையும் சுற்றமும் பந்தபாச பற்றும் விட்டு
இன்பஇறை நல்லறவாழ்வில் நிறைகான
இந்திரன்மால் பிரமன் எழில் தேவரெல்லாம்
வாழ்த்தி வாழ்த்துப்பாடி அழைத்தனரே
எங்குற்றாய் என்று ஏங்கிற்றே எங்கள் மனம்
இங்கு வாவென தேவர்கள் கூவியழைத்து
பொங்கும் காராம்பசுபாலூட்டி கற்பக பூசூடி
மங்கள ஆசியும் வாழ்த்துப்பாடி பரவி
வாழி நீ வானுலகில் நிரந்தரமெனவாழ்த்தினரே.

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஆக்கம் : வே. தம்பு

சாவு ஒன்றுதான் சாவுஇல்லாதது அதுதவிர
ஜெகத்தில் வேறெதுவும் சாஸ்தவமாய் நில்லாது.

# சித்தத்துள் காண்பதெல்லாம் சிவமே

அப்பனும் அம்மையும் சிவமே அரியசகோதரர் சிவமே
ஒப்பில் மனைவியும் சிவமே ஓதரும் மைந்தரும் சிவமே
செப்பில் அரசரும் சிவமே தேவாதி தேவரும் சிவமே
இப்புவிஎல்லாம் சிவமே எம்மை சூழ்வதும் சிவமே.

ஊரினிலே காணியில்லை உறவு மற்றோருவரில்லை
பாரில் நின் பாதமூலம் பற்றிலேன் பரம மூர்த்தி
கார்ஒளி வண்ணனே கண்ணனே கதறுகின்றேன்
யாருளர் களைகண் அம்மா அரங்கமா நகருளானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற தாய்தனை மக மறந்தாலும்
பிள்ளையை பெறுந்தாய் மறந்தாலும்
உள்ள தேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரை மேவிய உடல் மறந்தாலும்
கற்றநெஞ்சம் கலை மறந்தாலும்
கண் இமைப்பது மெய் மறந்தாலும்
நற்றவத்தவர் உள்ளிருந்து ஓங்கும்
நமச்சிவாயத்தை நான் மறவேனே.

உற்றார் யாருளரோ உயிர் கொண்டு போம் பொழுது
குற்றாலத்துறை கூத்தனல்லால் உற்றார் யாருளரோ.

## பேரர் பிரிவாற்றாமை

என்வெரர் என்றெம்மை எப்போது எடுக்கி
அன்பாய் அணைக்கும் அப்பாவே - வன்புவியில்
நின்னை ஒப்பற் நிகரில்லை யெமக்கென்றே
பாதபங்கயமென்றுமே உன்னுமோம்

## வாழ்த்து

எல்லாம் இங்கோர் சூதாட்டம்
இரவு பகலது மாறாட்டம்
வல்லான் வகுத்த வழிவழியே
வாழ்ந்தே தீர வேண்டுமென்றே
எல்லோர் உளமும் ஏங்கிநின்று
எமையாள் ஈசனை எண்ணியங்கு
நில்லா உடம்பை நினைந்துருகி
நிமலன் பாதம் தொழுவீரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரரின் வாழ்வில் சில நினைவுகள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் தந்தையே அமைதியாய் தூங்குங்கள்

புன்னையம் பதியினிலே
பூதராயர் அருகினிலே
பிறந்து, தவழ்ந்து
பள்ளிக்கல்வி
அனுபவக் கல்வி
பாங்காய் பயின்று,

தகுந்த காலத்தில்
திருமணம் செய்து
வீடுமனை கட்டி
தேடு செல்வம் பெருக்கி,
பிள்ளைகள் மூவர்
பேறாய்ப் பெற்று,

தந்தையே,

காலத்தின் பெருமையை
ஞாலத்தில் உணர்ந்து
காரியம் யாவும்
காலத்தே ஆற்றி

கல்விச் செல்வமே
செல்வத்துள் செல்வம் என்று
காலம் யாவும்
கற்றுத் தந்த தந்தையே
தூங்குங்கள் அமைதியாய்........!

ஐந்து வயதில்
பள்ளியில் சேர்த்து
ஆறாம் வகுப்பில்
உயர்கல்வி ஊட்டி
நாளும் பொழுதும்
கூட்டித்திரிந்து

வேலை கிடைத்தவுடன்
விதந்து பாராட்டி
பிள்ளைகள் முன்னேற்றமே
வாழ்க்கைக்கொரு அர்த்தமாய்
வாழ்ந்து காட்டிய தந்தையே
அமைதியாய் தூங்குங்கள்.....!

பிள்ளை வளர்ப்பிலே
தனித்துவம் பேணி,
அடி என்பதை அகராதியில்
அறியாமல்,
பார்வை ஒன்றாலே - எங்களை
கட்டிப்போட்டு
கண்டிப்பும், கருணையும்
கலந்தே வளர்த்த தந்தையே,
அமைதியாய் தூங்குங்கள்....!

தோளிலே போட்டு
தூங்கச் செய்து
நோய் நொடி என்றால்
துடித்தே, விழித்திருந்து
கண்ணின் மணிபோல்
காலமெல்லாம் காத்து
எண்ணமும் செயலும்
எமக்கே அர்ப்பணித்த
எம் தந்தையே,
அமைதியாய் தூங்குங்கள்.....!

மாலை நேரத்தில்
மங்கிய நிலவொளியில்
ஆறுதலான கலந்துரையாடல்கள்,
நண்பனாய், குருவாய்
நல்கிய அறிவுரைகள்
நெஞ்சுமுழுக்க நிறைந்திருக்க
மறக்குமா தந்தையே,
அமைதியாய் தூங்குங்கள்.....!

என்றும் அணியும்
வெள்ளை ஆடையாய்
வேட்டி, சேட்
உங்கள் மனம்போல்
தூய்மையாக,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சத்தியமும், நேர்மையும்
தன்னகத்தே கொண்டு
ஊரார் விதைந்துரைக்க
உத்தமனாய் வாழ்ந்த தந்தையே.
அமைதியாய் தூங்குங்கள்....!

மக்கட் செல்வத்திற்கு
மணமாலை சூட்ட
நாளும் தேடி, தேடி
பிள்ளைகள் விருப்பமும்
மனதிலே ஓட - நல்
வாழ்க்கை தந்த தந்தையே
பிள்ளைகள் பெருமையுடன்
வாழ்வதைக்கண்ட திருப்தியுடன்
அமைதியாய் தூங்குங்கள்....!

பிள்ளைகளோடு
கிள்ளைச் சத்தமாய்
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்
ஒன்றுகலக்க
பார்த்துப் பார்த்து
மகிழ்ந்திருந்தீர் - தந்தையே
தாத்தாவான புன்சிரிப்புடன்
அமைதியாய் தூங்குங்கள்....!

அமைதியாய் தூங்குங்கள்
தந்தையே!
கடமையை முடித்த
சந்தோசத்தோடு.....!

அமைதியாய் தூங்குங்கள்
தந்தையே!
அடுத்த தலைமுறைக்கு
பொறுப்புக்கு கொடுத்த
ஆறுதலோடு.....!
அமைதியாய் தூங்குங்கள்
தந்தையே!
நிறைந்ததொரு வாழ்க்கை
வாழ்ந்த நினைவோடு...!

நீங்கள்
வாழ்ந்த வாழ்க்கையால்
வாழ்க்கைக்கே பெருமை
அதனால்
அமைதியாய் தூங்குங்கள்!
வைகாசியில் ஒருநாள்
இலங்கைக்கு எப்பொழுது
வருகிறீர்கள் - என்றீர்கள்
சமருக்கு நானும்
வருகிறேன் என்றேன்
சிந்தனையின்றி,

எது நடக்க இருந்ததோ
அதுவே நடந்தது
எது நடக்குமோ
அதுவே நடக்கும்
உங்களின் தத்துவமும்
இதுதானே தந்தையே!

எல்லாச் செய்தியும்
சொல்லும் எனக்கு
தூங்கும் செய்தி
சொல்லாமல் போனீரே,

ஏனிந்த கட்டளை என்று
அழுது புலம்பினால்,
எழுபத்தேழு வருடம்
வாழ்ந்த ஊரில்
எனக்கொரு பிரதிநிதியாய்
என்வீட்டில் இரு என்றோ
என்னை அறுப்பினீர்?
உற்றவர், ஊரவர்
நண்பர் என்றே
உங்கள் புகழ்பாடி
ஓய்ந்து போயினர்
நீங்காத நினைவோடு....
உங்கள் விருப்பப்படி
எல்லாம் நடந்தது தந்தையே
அமைதியாய் தூங்குங்கள்....!

**பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புள்ள தாத்தா,

நாங்கள் உங்களுடன் கதைக்கும் போது எப்பொழுது இலங்கைக்கு வருகிறீர்கள் என்று கேட்பீர்கள். உங்கள் விருப்பப்படியே இலங்கையில் இருக்கும் பொழுது நீங்கள் எங்களை விட்டுப்போன செய்தி வருகிறது. நீங்கள் வாழ்ந்த வீட்டிலும் உங்கள் படத்திற்கு ஒவ்வொரு நாளும் பூ வைத்தோம். உங்கள் நினைவுகளுடன்... உங்களின் அன்பு அம்மாவின் ஊடாக எங்களுக்கு கிடைக்கின்றது.

குறிஞ்சி இராதாகிருஷ்ணன்.

Chers Tata,

A chaque fois que l'on te parle tu nous demande quand est-ce que l'on vient au Sri Lanka : Selon ton désir, nous étions au Sri Lanka lorsque nous avons appris que tu nous as quitté.

Tous les jours nous avons mis des fleurs sur ta photo accroché dans la maison où tu as vécu. Avec tes souvenirs ---- tout ton amour nous sera transmis grâce à maman.

Kurinchi Radhakrishnan.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புள்ள தாத்தா,

நாங்கள் நினைக்கிறோம், உங்களின் புன்சிரிப்புதான் எல்லோருக்கும் ஒளி கொடுத்திருக்கிறது, சுரேஸ் மாமா பணக்காரன் என்று கூப்பிடும் பொழுது அந்தச்சிரிப்பில நாங்களும் மகிழ்ந்திருக்கிறோம். ஒவ்வொரு நாளும் அம்மா, நீங்கள் வாழ்ந்த அருமையான வாழ்க்கை, நீங்கள் வாழ்ந்த சூழல், என்று பல கதைகளை மாலை நேரங்களில் எங்களுக்குச் சொல்லி இருக்கிறா. வெற்றி, தோல்வி முக்கியமில்லை எதிலும் பங்குபெறுவதும் அயராத உழைப்பு, எளிமையான வாழ்க்கை, அன்பும், கருணையும் நிறைந்த மனம், என்று பலவற்றை நீங்கள் வாழ்க்கை மூலம் காட்டியிருக்கிறீர்கள்.

நதி ராதாகிருஷ்ணன்
Nathi Radhakrishnan

Chère Tata
On pense, que ton sourire illumine tout le monde. Lorsqu'on appelle Suresh mama "Panakaran" on est aussi éblouie par ce sourire. Tous les soirs maman nous raconte différentes histoires sur ta vie et de ton cadre de vie. Tu nous a appris qu'il n'était pas important de gagner, ou de perdre, mais qu'il fallait participer à toutes activités, faire beaucoup d'effort pour gagner sa vie, vivre simplement, avoir un bon cœur rempli et de gentillesse.

நதி ராதாகிருஷ்ணன்
Nathi Radhakrishnan.

28/08/10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திவிநாயகர் துணை

# ஆயாக்கடவை சித்தி விநாயகர் தேவஸ்தானம்

## *Ayakadavai Sithivinayagar Devasthanam*

புன்னாலைக்கட்டுவன்,
சுன்னாகம்.

Punnalaikadduvan,
Chunnakam.
Date: [illegible]

1837ம் ஆண்டு முதல் தேவஸ்தான பரம்பரை பிரதம குருமார்
From 1837
Hereditary Chief Temple Priests

1. பிரம்மஸ்ரீ கதிரேசையர் அவர்கள்
Bramasri Kathiresaiyer.

2. பிரம்மஸ்ரீ க. சோமையர் அவர்கள்
Bramasri K. Somaiyer.

3. பிரம்மஸ்ரீ சோ. சங்கரஐயர் அவர்கள்
Bramasri S. Sankaraiyer.

4. பிரம்மஸ்ரீ ச. கதிர்காமையர் அவர்கள்
Bramasri S. Kathirgamaiyer.

5. பிரம்மஸ்ரீ க. செல்லையர் அவர்கள்
Bramasri K. Chelliyer.

6. பிரம்மஸ்ரீ செ. சோமசுந்தரஐயர் அவர்கள்
Bramasri S. Somasundraiyer.

7. பிரம்மஸ்ரீ சோ. பாலகிருஷ்ணஐயர் அவர்கள்
Bramasri S. Balakrishnaiyer.

8. பிரம்மஸ்ரீ பா. சுந்தரராஜசர்மா அவர்கள்
Bramasri B. Sunthara Raja Sarma

(1)

அமரர் வேலுப்பிள்ளை செல்லத்துரை

ஆயாக்கடவை சித்தி விநாயகர் ஆலயத்தில் மகோற்சவ காலங்களில் சப்பற திருவிழாவை வெகு கீர்த்தியாக பக்தி சிரத்தையோடும் பரம்பரை பரம்பரையாக செய்து கொண்டு வந்த குடும்பத்தின் ஆணிவேர் அமரர் வேலுப்பிள்ளை-செல்லத்துரை அவர்கள் பணக்காரன் என்ற பெயர் ஆகிய குடும்ப விருட்சத்தின் மகிமையை தனது நடை, உடை, பாவனையால் தக்க வைத்து பாதுகாத்து அடுத்த தலைமுறையான தனது பிள்ளைகளிடம் பொக்கிஷமாக கையளித்துள்ளார்.

நாளும் தவறாத காரிய செயற்றிறன், மனச்சாட்சியை விட மேலான தர்மம் இல்லை என்ற மாண்பு, எந்நிலையிலும் பிழையானவற்றை ஒன்றும் கைக்கொள்ளாத உறுதிப்பாடு, ஆயாக்கடவை ஐங்கரனின் மீது அளவற்ற பக்தி. என தர்மசிந்தனை, விநாயகரும் தெய்வ சிந்தனை என்பவற்றை வாழ்நாள் முழுவதும் கைக்கொண்ட பண்பாளன். மற்றவர் மனம் புண்பட என்றும் நடந்து அறியாத பெரியவர்.

ஆயாக்கடவை ஐங்கரனின் சப்பற பெருவிழாவிற்காக ஒரு பெரும் செலவிட்டு அழகிய மின்னும் சப்பறத்தையும், அதுதவிர்த்து பாதுகாக்க சப்பறம் தரிக்கும் இருப்பிடத்தையும் தன் உபயமாக செய்த பெருந்தகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயக்கடவை சித்தி விநாயகர் தேவஸ்தானம்
## *Ayakadavai Sithivinayagar Devasthanam*

புன்னாலைக்கட்டுவன்,
சுன்னாகம்.

Punnalaikadduvan,
Chunnakam.
Date: [illegible]

- 2 -

அவர் தனது பெற்றோரை முதுமையில் விழுந்த தாங்கி நின்று அவர்களது அந்திம காலக் கடன்களை நேர்த்தியாக ஆற்றிய பலன் கைமேல் கிடைத்ததை அறியக் கூடியதாக உள்ளது. அவர் வே. செல்லத்துரையை பிள்ளைகள் தம்முடன் வைத்துப் பராமரித்து மிகவும் அமைதியாகவும் நிம்மதியாகவும் தனது அந்திம காலத்தின் இறுதி வரை மகனின் சீரிய பராமரிப்பில் அவரின் அரவணைப்பில் கழித்தது பெருமைக்குரியது. போற்றப்பட வேண்டியது.

புன்னாலைக்கட்டுவன் கிராமத்தின் புகழ் பூத்த குடும்பத்தின் குலவிளக்கும் ஆயாக்கடவை க்ஷேத்திரத்தின் பெருமை மிகு உபயகாரருமான அமரரின் இழப்பு எமக்கு பேரிழப்பாகும்.

அமரரின் இழப்பால் துயருறும் குடும்ப உறவுகளுடன் துயர் பகிர்வதோடு. அன்னாரின் ஆன்மா பேரின்ப நிலை பெற நான் அனுதினமும் வணங்கும் ஆயாக்கடவை க்ஷேத்திர பாதாரவிந்தங்களில் என் வேண்டுதல் சமர்ப்பிக்கின்றேன்.

பிரம்மஸ்ரீ. பா. சுந்தரராஜ சர்மா
ஸ்தானிக குரு
ஆயாக்கடவை சித்திவிநாயகர்
தேவஸ்தானம்
புன்னாலைக் கட்டுவன்

1837 முதல் சித்தி விநாயகர் தேவஸ்தான பரம்பரை பிரதம குருமார்கள்
From 1837
Hereditary Chief Temple Priests

1. பிரம்மஸ்ரீ கதிரேசையர் அவர்கள்
Bramasri Kathiresaiyer.
2. பிரம்மஸ்ரீ க. சோமையர் அவர்கள்
Bramasri K. Somaiyer.
3. பிரம்மஸ்ரீ சோ. சங்கரையர் அவர்கள்
Bramasri S. Sankaraiyer.
4. பிரம்மஸ்ரீ ச. கதிர்காமையர் அவர்கள்
Bramasri S. Kathirgamaiyer.
5. பிரம்மஸ்ரீ க. செல்லையர் அவர்கள்
Bramasri K. Chelliyer.
6. பிரம்மஸ்ரீ செ. சோமசுந்தரஐயர் அவர்கள்
Bramasri S. Somasundraiyer.
7. பிரம்மஸ்ரீ சோ. பாலகிருஷ்ணஐயர் அவர்கள்
Bramasri S. Balakrishnaiyer
8. பிரம்மஸ்ரீ பா. சுந்தரராஜசர்மா அவர்கள்
Bramasri B. Sunthara Raja Sarma

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணக்காரன் பரம்பரையை மாண்புறச் செய்தவர்

புன்னாலைக்கட்டுவனில் புகழ்பூத்த குடும்பங்களில் அப்பச்சியர் குடும்பத்த வரும் எண்ணத்தக்கவர்கள். மூன்று தலைமுறைக்கு மேல் பணக்காரன் என்னும் மாண்பினை தக்கவைத்தவர்கள். தமது நடை உடை பாவனையால் ஊரவர்கள் மட்டுமன்றி அயல் ஊர் மக்களதும் மதிப்பைப் பெற்றவர்கள்.

பேரன் அம்பலவாணர் காலத்தில் இருந்த அவரின் 5 பெண்பிள்ளைகளும் இரு ஆண்பிள்ளைகளும் மிகுந்த செல்வாக்குடன் விளங்கியவர்கள். 5 பெண் பெற்றால் அரசனும் ஆண்டியாவான் என்ற முதுமொழியை பொய்ப்பித்து அரசோக்கியவர் அப்பச்சியர் என்னும் அம்பலவாணர். அவரின் சிரேட்ட புதல்வனே பணக்காரன் வேலுப்பிள்ளை ஆவார்.

பணக்காரன் வேலுப்பிள்ளை, ஐயாத்தைப்பிள்ளை தம்பதியினரின் கனிஸ்ட புதல்வனே அமரர். செல்லத்துரை ஆவார். அமரர் செல்லத்துரை பழகுவதற்கு மிகவும் இனியவர். மனச்சாட்சியின்படி காரியங்களை மேற்கொள்வார். பணக்காரன் என்ற மரபு வழி வந்த மாண்பினை தனது வாழ்நாள் முழுவதும் போற்றி பாதுகாத்து வாழ்ந்தவர்.

ஆயக்கடவை சித்தி விநாயகர் ஆலயத்தில் சப்பறத்திருவிழாவை வெகுசிறப்பாக செய்தவர். எமது தந்தையாரான அமரர். து. குமாரசாமி ஐயா பால் மிகுந்த அபிமானம் கொண்டவர். அந்தணர்கள் மீது பெரும் மதிப்பு வைத்திருந்தார்.

தனது இறுதிக்காலத்தில் தனது பிள்ளைகளுடன் கனடாவில் மிகவும் நேர்த்தியாக வாழ்ந்து பேரின்பநிலை அடைந்தது மனம் நிறைவாக உள்ளது.

அமரர் செல்லத்துரையின் ஆத்மா ஆயாக்கடவை சித்திவிநாயகர் பாதார விந்தங்களில் சாந்தியுற வேண்டி பிரார்த்தனை செய்கின்றோம்.

கலாநிதி சிவஸ்ரீ. து.கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் J.P
நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன சிவாச்சாரியார்
ஆயக்கடவை சித்தி விநாயகர் ஆலய
மகோற்சவ கால குரு, புன்னாலைக்கட்டுவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/புன்னாலைக்கட்டுவன் அரசினர் அ.த.க பாடசாலை
பழைய மாணவர் சங்கம்

J/PUNNALAIKADDUVAN G.T.M. SCHOOL
OLD BOYS ASSOCIATION

Chunnakam சுன்னாகம்

திரு. த. லோகராசா (தலைவர் President) | திரு. பி. கணேசானந்தன் (செயலாளர் Secretary) | திரு. வி. ஜெயவரதன் (பொருளாளர் Treasurer) | 14.08.2010


அமரர் செல்லத்துரை
குடும்பத்தினருக்கு;

எமது ஆழ்ந்த அனுதாப செய்தி

அமரர் செல்லத்துரை அவர்களின் அமரத்துவ செய்தியை பத்திரிகை வாயிலாக அறிந்து அதிர்ச்சியுற்றோம். அவரின் பிரிவால் துயர் அடைந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அமரர் செல்லத்துரை அவர்கள் புன்னாலைக்கட்டுவன் தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர். 65 ஆண்டுகாலம் இங்கு வாழ்ந்து நாட்டு நிலைமை காரணமாக இறுதி 15 ஆண்டுகள் தமது பிள்ளைகளுடன் கனடாவில் வாழ்ந்தவர். இவர் சிறந்த நற்பண்பாளன். அமைதியான சுபாவம் உடையவர்.

எமது கிராமத்தின் மீதும் கிராமத்தில் அமைந்துள்ள ஆயாக்கடவை ஐயனார் மீதும் மிகுந்த பற்றும் ஈடுபாடும் உடையவர். இதன் காரணமாக ஐயனார் திருவிழாவை வருடம் தோறும் சிறப்பாக செய்து வந்தவர். இவர் கிராமத்தின் மீது உள்ள பற்று போன்றே கிராமத்தில் அமைந்துள்ள அ.த.க பாடசாலை மீதும் மிகுந்த பற்று உடையவர். இதன் காரணமாக தமது பிள்ளைகள் மூவரையும் இப்பாடசாலையில் சேர்த்து ஆரம்ப கல்வியை பயிலவைத்து அவர்களுடைய கல்வி செயற்பாடுகளை ஊக்குவித்தது மட்டுமல்லாமல் பல போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களும் பெறவைத்து பாடசாலைக்கு பெருமை தேடித் தந்தவர்.

தனது பிள்ளைகளும் கிராமத்து பிள்ளைகளும் கல்வியில் மேன்மை பெறவேண்டும் என்ற பெரும் விருப்புடன் ஆயாக்கடவை [illegible] ஆலயத்தில் சரஸ்வதி சிலையை பிரதிஷ்டை செய்தவர். அன்னாரை போன்றே அவரது பிள்ளைகளும் கிராமத்து பொது பணிகளில் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றனர். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆயாக்கடவை [illegible] இறைவனை பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

J/PUNNALAIKADDUVAN G.T.M. SCHOOL
OLD BOYS ASSOCIATION
President / Secretary / Treasurer

# கண்ணீர் அஞ்சலி



உயர்திரு
## வேலுப்பிள்ளை செல்லத்துரை
புன்னாலைக்கட்டுவன் தெற்கு

தோற்றம்
29-09-1925

மறைவு
25-07-2010

புன்னாலைக்கட்டுவன் எனும் புண்ணிய பதியில்
ஆயாக்கடவை சித்திவிநாயகர் அருளால் வந்துதித்தவரே
புகலிட தேசத்தில் உங்கள் உயிர் பிரிந்ததுவோ!
ஒன்றாய் கூடி ஊரில் வாழ்ந்திட்ட நாட்களை
மறந்திடத்தான் எமக்கு மனம் வருமோ ஐயா!
அறக்கொடைகள் பலசெய்து அணைத்திடுவீர்
இன்முகம் கொண்டு உதிர்ந்திடும் புன்சிரிப்பு
உற்ற உறவுகளோடு உவகை கொண்டு
வற்றாத பாசத்தை கொட்டித் தீர்த்திடுவீர்
இல்லறத்தின் துணையாய் தேவியைப் பெற்றீர்
இனிதான பிள்ளைச் செல்வங்கள் மூவரைத் தந்தீர்
பிள்ளைகள் பெருமையுற இணையான மருமக்களையும்
தேர்ந்தெடுத்து நாளும்பொழுதும் நல்லன செய்து
பேரப்பிள்ளைகளோடு கொஞ்சி விளையாடி மகிழ்ந்திருந்தீர்

வேளாண்மைத் தொழிலே உயர்தொழிலென எண்ணி
பிறந்த மண்ணை பிரிந்திட என்றும் மனமின்றி
மக்களின் வேண்டுதலில் கனடா தேசம் வந்து
மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் என மகிழ்ந்திருக்க
ஆண்டவன் உம்மை அழைத்தானோ தம் சேவைசெய்ய
அவர் அடியினில் ஆறுதல் பெற்றிடுவீர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர், நண்பர்கள்
அனைவரது துயரிலும் நாமும் பங்குகொண்டு அஞ்சலிகளைத்
தெரிவிக்கிறோம்.

புன்னாலைகட்டுவன், ஈவினை
கனடா வாழ் மக்கள் ஒன்றியம்

JJ Print 416.298.9322

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் வளமான வாழ்வுக்கு வழிகாட்டியாக இருந்து எம்மை வாழவைத்து அமரராகிவிட்ட செல்வச் சீமான் வேலுப்பிள்ளை செல்லத்துரை அவர்கள் சிவப்பேறு பெற்றவேளை வருகை தந்து எமது துயரத்தில் பங்குகொண்டோருக்கும், வெளிநாடுகளில் இருந்து துயரை பகிர்ந்துகொண்டோருக்கும், மலர்மாலைகள், மலர்வளையங்கள் சாத்தி அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டோருக்கும், திருமுறைகள் ஓதிய பெரியோர்களுக்கும், இறுதிக்கிரியைகள், இறுதி ஊர்வலம் மற்றும் தகனக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை, மதியபோசனத்தில் கலந்து கொண்டோருக்கும், அந்தியேட்டிக் காலம்வரை எமக்கு உணவு படைத்தோருக்கும், இந்த நினைவுமலருக்கான ஆக்கங்களைத் தந்துதவியவர்களுக்கும், ஒலித்தட்டுக்கான பாடல்களை தந்துதவிய புன்னைநகர் வெளியீட்டகத்திற்கும், எங்களோடு இறுதிவரை இருந்து பலவழிகளில் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது இதயம் நிறைந்த நன்றி நவிலலை பகிர்ந்து கொள்கின்றோம்.

என்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகர்க்கு

நன்றியுடன்

மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரரின் பேரனார்அம்பலவாணர் (அப்பச்சியர்) தன் மனைவி பிள்ளைகளுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடு

**பிரபல குடும்பம் காரைக்கால் வேளாளர் (மயிலைநகர்)**

**சங்கரநாதமுதலி**

↓

**முதலித்தம்பி**

↓

**சங்கரப்பிள்ளைமுதலி**

பூதப்பிள்ளை

முதலித்தம்பி (வயாவிளான்)

சின்னத்தங்கம்

நன்னிப்பிள்ளை

செல்லம்மா
(வ.முத்துத்தம்பி)
↓
நாகபூஷணியம்மா
மாசிலாமணியம்மா

சுந்தரம்மா
(வ.இளையதம்பி)
↓
இராசரத்தினம்மா
விக்கினேஸ்வரராசா

தங்கம்மா
(த.செல்லப்பா)
↓
கனகசபை
இரத்தினதேவி
முத்துக்குமாரு

**வேலுப்பிள்ளை**
**(சி.ஐயாத்தைப்பிள்**

தம்புநாதர்
(பத்மாவதி)

சுரேந்திரன்
(பத்மதேவி)

அபிரா
ஹரி

புவீந்திரன்
(கெங்காதேவி)

வேணு
வேணி

அன்னம்மா
(குமாரசாமி)

யோகே
(ராதாகி

குறி
ந

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...ம்ப விருட்சம்

தம்பாப்பிள்ளை
(புன்னாலைக்கட்டுவன்)

**பூதப்பிள்ளை**
**இவர் மனைவி**
**ஐயாத்தைப்பிள்ளை**

...ளை

தம்பாபிள்ளை
(மல்லாகம்)

சேதுப்பிள்ளை

**அம்பலவாணர்**
**(அப்பாச்சிப்பிள்ளை)**

இளையபிள்ளை

**...ா**
**...ளை)**

பூதப்பிள்ளை
(செ.நாகமுத்தம்மா)

பூராசா
பூராணி
பூமணி
பூலிங்கம்
பூலோகசிங்கம்

நன்னிப்பிள்ளையம்மா
(ஆ.சங்கரப்பிள்ளை)

கதிரித்தம்பி
விசுவநாதமுதலி
ஆறுமுகம்

விசாலாட்சியம்மா
(ஆ.சுப்பிரமணியம்)

மகேஸ்வரி
ஞானாம்பிகை
பத்மாவதி
பரமேஸ்வரி
ராஜலட்சுமி
நாகேந்திரன்

**செல்லத்துரை**
**(தேவி)**

...கேஸ்வரி
...(ருஷ்ணன்)

...றிஞ்சி
...நதி

சுரேஸ்
(உமாநந்தினி)

சாம்பவி

சந்திராணி
(சிவரூபன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.

எது நடக்கின்றதோ, அது நன்றாகவே நடக்கிறது.

எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.

உன்னுடையதை எதை இழந்தாய்? எதற்காக நீ அழுகின்றாய்?

எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?

எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு?

எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.

எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.

எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையாகிறது.

மற்றொரு நாள் அதுவே வேறொருவருடையதாகும்.

இதுவே உலக நியதி ஆகும்.

Apex: 416-297-0707

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org